# පරිසර අමාත්‍යාංශය
# சுற்றாடல் அமைச்சு
# Ministry of Environment

"සොබාදම් පියස", අංක 416/සී/1, රොබට් ගුණවර්ධන මාවත, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
"சொபாதம் பியச", இல. 416/சி/1, ரொபர்ட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்லை, இலங்கை.
"Sobadam Piyasa", No. 416/C/1, Robert Gunawardana Mawatha, Battaramulla, Sri Lanka.
Gen. Tel. +94-11-2034100

ලේකම් / செயலாளர் / Secretary +94-11-2034121
ෆැක්ස් / தொலை நகல் / Fax +94-11-2879944


මගේ අංකය / எனது இல / My No } MOE/07/EDU-TR/02/WED/22
ඔබේ අංකය / உமது இல / Your No }
දිනය / திகதி / Date } 2022.05.9

**சுற்றாடல் சுற்றறிக்கை 01/2022**

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
சகல பிரதம செயலாளர்களுக்கும்
சகல இராஜாங்க செயலாளர்களுக்கும்
சகல மாகாண செயலாளர்களுக்கும்
சகல மாவட்டச் செயலாளர்களுக்கும்
சகல திணைக்களத் தலைவர்களுக்கும்
சகல உள்ளுராட்சி மன்றத் தலைவர்களுக்கும்
சகல அரச கூட்டுத்தாபன மற்றும் நியதிச் சட்ட சபைகளின் தலைவர்களுக்கும்

**தேசிய சுற்றாடல் தின கொண்டாட்ட நிகழ்ச்சித் திட்டம் - 2022 ஜுன் 05**

இயற்கைக்கும், மனிதனுக்குமிடையில் பிரிக்க முடியாத பிணைப்பு காணப்பட்டாலும், பிற்பாடு வரையறையற்ற மானிடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென முன்னெடுக்கப்பட்ட பாதகமான மானிடச் செயற்பாடுகள் காரணமாக மேலெழுந்த சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகள் முழு மொத்த உயிரிகளினதும் இருப்பிற்கு அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்திய வண்ணமுள்ளன.

குறிப்பாக அண்மைக் காலமாக ஏற்பட்ட கொவிட் 19 போன்ற தோற்று நோய்கள் மானிட சமூகம் முழுதும் பரவியதன் காரணமாக சுற்றுச் சூழலுக்கும், மானிட செயற்பாடுகளுக்கும் இடையில் மிகச் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை தொடர்பில் முழு உலகமும் உணர்ந்த வண்ணமுள்ளது.

02. சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பாக உலகலாவிய குடி மக்களது கவனத்தை ஈர்த்தெடுக்கும் நோக்கில் 1972 ஆம் ஆண்டில் ஸ்வீடனின் ஸ்ரொக்ஹோம் நகரில் நடைபெற்ற சர்வதேச சுற்றாடல் மா நாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் தோற்றம் பெற்ற **ஐக்கிய நாடுகளினது சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் (UNEP)** ஆரம்ப தினத்தைக் கொண்டாடுவதற்கென ஒவ்வொரு வருடமும் **ஜுன் மாதம் 05 ஆம் திகதி சர்வதேச சுற்றாடல் தினமாகப் பெயரிடப்பட்டுள்ளது.** இதன் பொது சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் உலகம் முழுதுமுள்ள குடி மக்களை அறிவூட்டுவதற்கும், சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பில் கொள்கைகளைக் கட்டியெழுப்புவோரினது கவனத்தை ஈர்த்தெடுக்கும் நோக்கிலும் ஒவ்வொரு வருடமும் விசேடமான தலைப்புகளின் கீழ் சர்வதேச சுற்றாடல் தினம் கொண்டாடப்படுகின்றது. அதன் பிரகாரம் ஐக்கிய நாடுகளினது சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம் இவ் வருடத்தின் சர்வதேச சுற்றாடல் தினத் தலைப்பாக **"only on earth"** எனும் தொனிப் பொருள் முன் வைக்கப்பட்டுள்ளது.

03. 2021 நவம்பர் 18 ஆம் திகதி ஸ்வீடன் அரசினால் 2022 சர்வதேச சுற்றாடல் தினம் ஐக்கிய நாடுகளினது சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டத்துடன் (UNEP) கூட்டாகப் பங்களிப்பை வழங்கிய வண்ணம் அதனைக் கொண்டாடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஆயத்தம் செய்துள்ளன. சர்வதேச சுற்றாடல் தினம் உலகலாவிய குடி மக்களுக்கு மிக முக்கியத்துவமுள்ள வாய்ப்பாக இதனைக் கருதிய வண்ணம் கொண்டாடுவதற்கு வாய்ப்பு கிடைக்கக் கூடியதாகவுள்ளது. ஸ்வீடனில் ஸ்ரொக்ஹோம் நகரில் நடைபெற்ற மானிட சுற்றாடல் தொடர்பில் ஐக்கிய நாடுகளினது மாநாடு நடாத்தப்பட்ட 1972ஆம் ஆண்டிலிருந்து 2022 வரையான 50 வருடத்தை **(Stockholm+50)** நினைவு கூர்ந்த வண்ணம் கொண்டாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையே அதற்குக் காரணமாகவுள்ளது.

04. அதற்கமைய, இம்முறை இலங்கையிலும் சுற்றாடல் அமைச்சின் தலைமையில் சர்வதேச சுற்றாடல் தினத்தை ''பூலோகம் ஒரேயொரு குடிமனை" எனும் தொனிப் பொருளின் கீழ் கொண்டாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

05. இன்றளவில் கால நிலை மாற்றங்கள், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் சூழல் மாசாக்கம் போன்ற மூவகைச் சவால்களுக்கும் மனிதன் தொடர்ச்சியாக முகங் கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளது. இதனால் மிக விரைவாகப் பூமியில் காணப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் மானிட வர்க்கத்தினாலேயே பாதுகாக்கப்பட்டும், மீண்டும் வலுவூட்டி மீள் நிலைப்படுத்தப்பட்டும் இயற்கைக்கும், மனிதனுக்குமிடையில் பொதுக் கருத்தோம்பளுக்கு அழைப்பு விடப்படுகின்ற உலகளாவிய மேடையாக உலக சுற்றாடல் தினத்தை மாற்றீடு செய்வதற்கு நாம் திடமாக உறுதி கொள்ள வேண்டியுள்ளது.

06. இதற்கென ''சர்வதேச சுற்றாடல் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித் திட்டம்" எனும் தலைப்பின் கீழ் முன் வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் சர்வதேச சுற்றாடல் தின தேசிய விழாவுக்கு நேரொத்ததாக "தேசிய சுற்றாடல் வாரம்" பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இவ் வருடம் மே மாதம் 30 ஆம் திகதியிலிருந்து ஜூன் மாதம் 05 ஆம் திகதி வரையான வாரம் ''தேசிய சுற்றாடல் வாரம்" ஆகப் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதுடன், அத் தினங்கள் கீழுள்ளவாறு பெயரிடப்பட்டுள்ளன.

மே 30 சுற்றாடல் சுத்தப்படுத்துகை மற்றும் கழிவு முகாமைத்துவ தினம்
மே 31 வாயு மாசாக்கத்தைக் குறைக்கும் தினம்
ஜூன் 01 நீர் மற்றும் நீர் மூலாதாரங்களைப் பாதுகாக்கும் தினம்
ஜூன் 02 உயிர்ப் பல்வகைமை பாதுகாப்பு தினம்
ஜூன் 03 சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் அறிவூட்டும் தினம்
ஜூன் 04 பேண்தகு காணி முகாமைத்துவத் தினம்
ஜூன் 05 சர்வதேச சுற்றாடல் தினக் கொண்டாட்டம் மற்றும் மர நடுகை தினம்

07. இதனடிப்படையில் அனைத்து நிறுவனத் தலைவர்களினாலும் தமது பணிக் குழுவுக்கும், பாடசாலை அதிபர்களினால் தமது பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கும் சர்வதேச சுற்றாடல் தினத்தின் முக்கியத்துவம் தொடர்பில் அறிவூட்டுதல், அலுவலக மற்றும் பாடசாலை வலாகங்களைச் சுத்தப்படுத்தும் சிரமதானங்களை நடாத்துதல், கழிவுகளைப் பாகுபடுத்தி (பிளாஸ்ரிக் / பொலிதீன் / பத்திரிகை / கண்ணாடி / உலோகம் / சேதனப் பதார்த்தங்கள்) என முறையாக வெளியகற்றும் செயன் முறையை அறிமுகப்படுத்திய வண்ணம் அத்தகைய செயற்பாடுகளைச் செயற்படுத்துதல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்.

08. அவ்வாறே நாடு பூராகவுமுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைமையில் அவ் உள்ளூராட்சி ஆளுகைப் பிரதேசங்களில் சுற்றாடலைச் சுத்தப்படுத்துதல், கழிவு பாகுபடுத்துகை மற்றும் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தி பராமரித்தல் உள்ளடங்களான சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்.

09. மேலும் தேசிய சுற்றாடல் வாரத்தினுள் அரச்ச நிறுவனங்கள், பாடசாலைகள், தனியார்ப் பிரிவு, பெருந் தோட்ட நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், சிவில் இயக்கங்கள் போன்றவர்ரினது தலைமையில் குடி மக்களினது பங்குபற்றுதலுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்திய வண்ணம் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டுமென சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

i. பசுமை மிக்க, சுத்தமான நாடொன்றை நிர்மாணிக்கும் செயற்பாட்டை ஒவ்வொரு வீடுகளிலிருந்தும் ஆரம்பிப்பதன் முக்கியத்துவத்தையும், சுற்றாடல் பாதுகாப்பின் முக்கியத்துவம் தொடர்பிலும் குடி மக்களை அறிவூட்டுதல்
ii. பேண்தகு வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கையை விருத்தி செய்தல்
iii. பிரதேசத்தின் அடிப்படையில் பசுமைத் தொழில் வாய்ப்புகளைக் கண்டறிதல் மற்றும் விருத்தி செய்யக் கூடிய நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்
iv. பொலிதீன் மற்றும் பிளாஸ்ரிக் பயன்பாட்டைக் குறைத்தல் மற்றும் சுற்றாடல் நற்புள்ள பொதியிடல் பதார்த்தங்களை விஸ்தரித்தல்
v. சீரான கழிவு முகாமைத்துவ செயற் திட்டங்களைப் பின்பற்றுதல்
vi. எம்மைச் சூழவுள்ள காற்றின் தூய்மையைப் பேணுவதன் வாயிலாகக் கிடைக் கூடிய பலன்கள், வளி மாசாக்கம் காரணமாக ஏற்படக் கூடிய பாதகமான நிலைகள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பின் முக்கியத்துவம் தொடர்பில் பொது மக்களை அறிவூட்டுதல்

vii. வன விதானத்தை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் கிராமிய ரீதியாகவும், நிறுவன ரீதியாகவும் நடுகைப் பொருட்களை அதிகரிப்பதற்கென நாற்றங்கால்களை உறுவமைத்தல்
viii. நீரேந்து, ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள், ஆற்றங் கரைகள், ஈர நிலப் பிரதேசங்கள் போன்ற சூழல் தூண்டல் மிக்க நிலப் பகுதிகளைக் கண்டறிதல் மற்றும் அவற்றைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் பேண்தகு காணி முகாமைத்துவம் தொடர்பில் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல்
ix. பாதிக்கப்பட்ட நிலப் பிரதேசங்களை மறு சீரமைத்தல், மண் பாதுகாப்பு மற்றும் பேண்தகு காணி முகாமைத்துவம் தொடர்பில் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்
x. உயிர்ப் பல்வகைமை பாதுகாப்பு தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
xi. பசுமைக் கடற் கரையோரம் எனும் கோட்பாட்டுக்கு இசைவாக கடற் கரையோரத்தில் மர விதானங்களை அதிகரித்தல் மற்றும் கடற் கரையோர வலயங்களைச் சுத்தப்படுத்துதல்
xii. கடற் கரையோர சுற்றாடல் தொகுதிகளைப் பேண்தகு வகையில் முகாமைத்துவமப்படுத்துதல் மற்றும் கண்டல் தாவரங்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்

10. ஒவ்வொரு நிறுவனங்களினாலும் மேற்குறித்த சிபாரிசுகளின் பிரகாரம் பொருத்தமான சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களைத் தேசிய சுற்றாடல் வாரத்தினுள் முன்னெடுப்பதற்கென ஆரம்ப நிலைத் திட்டங்களைத் தயாரித்து நிறுவனத்தின் அனைத்துத் தரப்பினரதும் பங்குபற்றுதலுடன் அதனைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் பொருத்தமாகவிருக்குமென மேலும் அறியத் தருகின்றேன்.

11. தேசிய சுற்றாடல் வாரத்தினுள் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களினதும் முன்னேற்றத்தை https://drive.google.com/drive/folders/1N9evbvEQzZOX_OkCGDN-pf1K46M0O_fC?usp=sharing இணைய முகவரியினூடாக அல்லது அத்தகைய அடிப்படையில் செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் அச்சுப் பிரதியாக சுற்றாடல் அமைச்சுக்கு அறிக்கையிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அறிவிக்கின்றேன்.

12. எதிர் வரும் வருட காலப் பகுதிகளில் தேசிய சுற்றாடல் வாரம் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கென அந் நிகழ்ச்சித் திட்டத்தைத் தமது நிறுவனங்களின், மாவட்டங்களின் அல்லது மாகாணங்களின் வருடாந்த திட்டங்களினுள் உள்ளடக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளைச் செயற்படுத்துமாறு தயவாக அறிவிக்கின்றேன்.

13. இச் செயற்பாடுகளை முன்னெடுக்கையில் 2022.04.26 ஆம் திகதிய இலக்கம் 03/2022 தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுமாறு அறிவிக்கின்றேன்.

சுற்றாடலுக்குத் தூண்டல் மிக்க குடி மக்களைத் தோற்றுவிப்பதற்கு நீங்கள் வழங்குகின்ற ஒத்துழைப்பை மனப்பூர்வமாக மெச்சுகின்றேன்.

வைத்தியர் அனில் ஜாசிங்க
செயலாளர்

பிரதிகள்:

| | | |
|---|---|---|
| 01. | சனாதிபதியின் செயலாளர் | - தயவுடன் அறிந்து கொள்வதற்கு |
| 02. | பிரதமரின் செயலாளர் | - தயவுடன் அறிந்து கொள்வதற்கு |
| 03. | அமைச்சரவையின் செயலாளர் | - தயவுடன் அறிந்து கொள்வதற்கு |